**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்**

## நிமித்த அடிப்படையில் (Ad-hoc) வேலை மேற்பார்வையாளர் பதவிக்கான நியமனங்களை மேற்கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

KOICA, TEDP ஆகிய கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள கட்டட வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு குடிசார் மற்றும் கணிய அளவையியல் துறைகளில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் தகைமையை முழுமையாக பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. போதியளவு தகுதி வாய்ந்த விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறாதவிடத்து குடிசார் மற்றும் கணிய அளவையியல் துறைகளில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் கற்கை நெறியினைப் பயின்று கொண்டிருக்கும் மாணவர்களிடமிருந்து தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கூடாக விண்ணப்பங்கள் கோர நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேற்படி நியமனம் நிமித்த அடிப்படையிலேயே (Ad-hoc) மேற்கொள்ளப்படும் என்பதுடன் அவர்களுக்குரிய வேதனமாக அரச திணைக்களங்களில் தொழில்சார் தொழிலாளர்களுக்கு (Skill Labourer) வழங்கப்படக்கூடிய ஊதியத்திற்கு சமமான தொகை அவர்களது நாளாந்த வரவின் அடிப்படையில் மாதாந்தம் வழங்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் கீழ்க் குறிப்பிடப்பட்ட அலுவலக முகவரியிலும், வட மாகாண இணையத்தளத்திலும் (www.np.gov.lk), மற்றும் மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்திலும் (www.edumin.np.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் **05.05.2021 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் ‘‘நிமித்த அடிப்படையில் வேலை மேற்பார்வையாளர் பதவிக்கு நியமனம் மேற்கொள்வதற்கான விண்ணப்பம்’’ என்பதனை தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகைமையுடைய விண்ணப்பதாரிகள் ஆவணங்களைப் பரிசீலிப்பதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நியமனங்கள் தொடர்பான இறுதி முடிவு கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரினாலேயே எடுக்கப்படும்.

**இ.இளங்கோவன்,** **21.04.2021**
**செயலாளர்**